தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 137/பேரூ/2022
நாள் 10.11.2022

| | | |
|---|---|---|
| திரு.தீ. ராஜ்கபூர்,<br>குச்சனூர். | – | முறையீட்டு மனுதாரர். |
| செயல் அலுவலர்,<br>குச்சனூர் பேரூராட்சி. | – | எதிர் மனுதாரர் |

குச்சனூர், உத்தமபாளையம் சாலை, பள்ளிவாசல் தெரு, வார்டு 7 என்ற முகவரியில் வசிக்கும் திரு.தீ.ராஜ்கபூர் என்பவரின் 17.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.08.2022 அன்று பெறப்பட்டு 137/பேரூ/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

குச்சனூர், உத்தமபாளையம் சாலை, பள்ளிவாசல் தெரு, வார்டு 7 என்ற முகவரியில் வசிக்கும் திரு.தீ.ராஜ்கபூர் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"ஸ்ரீ சுயம்பு சனிஸ்வரபகவான் திருக்கோயில் இருக்கும் புண்ணியதலமான குச்சனூர் பேரூராட்சியில் பணிபுரிந்து வரும் திரு.ஆரோக்கியசாமி, கிளார்க். செயல் அலுவலர் திருமதி.சசிகலா ஆகியோர் பல இலட்சங்கள் ஊழல் செய்தது குறித்தும், புதியதாக கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் பங்களாவில் உள்ள தேக்கு மர கட்டில்கள் மெத்தைகளை திருடப்பட்டது குறித்தும் புகார் அளித்தும் அரசு சொத்தை திருடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி நடவடிக்கை இல்லை. இவர் உயர் அதிகாரிகளின் அரவணைப்பில் அவர்களுக்கு தவறான பாதைகளை காட்டிக்கொண்டு பகவான் வாழும் ஊரில் கொள்ளை அடித்து கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் மீது எந்த நடவடிக்கை எடுப்பதில்லை வேறு ஊருக்கு மாற்றக்கூடாது என்ற மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர். உதவிஇயக்குநர் அவர்களுக்கு கட்டில் பரிசளித்துள்ளாராம். இப்படி உயர்அதிகாரிகளே இலஞ்சம் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் யாரிடம் முறையிடுவது அய்யா. இவர்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அலுவலர்களுக்கு புகார் கடிதம் அளித்து, அவர்களும் தற்பொழுது தீவிர விசாரணை நடத்திக் கொண்டுள்ளனர் என்றும், இவர்கள் குறைவான நபர்களை தற்காலிக ஸ்வீப்பர்களாக வைத்து கொண்டு, 37 நபர்களுக்கு தினசரி

ஸ்வீப்பர்கள் ஊதியம் எடுத்து கொண்டு அரசின் சொத்தை ஏமாற்றி வருகிறார்கள். கீறல் இடமால் செக் போடுகிறார்கள் என்றும் தெரிவித்தார். இது குறித்து நடவடிக்கை எடுக்க உள்ளாட்சி துறை உதவி இயக்குநர்களுக்கு பலமுறை அறிவுறுத்தியும் அவர்களுக்கும் இலஞ்சம் தருவதால் அவர்களை கண்டுகொள்ளுவதில்லை என்று ஆரோக்கியசாமி கிளார்க் கூறிவருகிறார். இந்த ஆரோக்கியசாமி கிளார்க் என்பவர் விசாரணை செய்யும் அதிகாரிகளை மிரட்டுகிறார். விசாரணை செய்யவிடாமல் தடுக்கிறார் தனக்கு சேர்மன் துணை உள்ளார் என்று மிரட்டுகிறார். குறுக்கே கோடு இல்லாமல் போடப்படும் காசோலைகளை பற்றி புகார் தெரிவித்து இருந்தேன். அதனை பற்றி தீவிர விசாரணை செய்ய வேண்டும். பகவான் இருக்கும் புண்ணியதலத்தில் அதிகாரிகளாக இருந்து கொண்டு கீறல் இடப்படாமல் பொய்யான காசோலைகளை போட்டு அலுவலக ஊழியர்களைக் கொண்டே அதனை வங்கியில் மாற்றி பெரும் தொகை சம்பாதித்து கொண்டு உள்ளார்கள். மேலும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளில் கூட பணம் பெற்று கொண்டுதான் வழங்குகின்றனர். செய்யாத வேலைகளை செய்தது போன்று பொய்யான கணக்குகளை காட்டி அரசினை பெரும் இழப்பில் தள்ளுகின்றனர். இந்த இருவரும் தனித்தனியாக பங்களாக்கள் கட்டி உள்ளனர். மேலும் பெங்களுரில் கிளார்க் ஆரோக்கியசாமி புதியதாக சொத்து வாங்கியுள்ளார். திரு. ஆரோக்கியசாமி தற்பொழுது தவறான வழியில் பதவி உயர்வு பெற்று இப்பொழுது குச்சனூரில் கிளார்க்காக பணி செய்கிறார். இவருக்கு எப்படி வந்தது இந்த பதவி உயர்வு என்று துறை ரீதியாக ஆராய வேண்டும். மேலும் தவறாக தனது அதிகாரத்தை பயன்படுத்தி ஊழல் செய்தும் பொது மக்களிடம் இலஞ்சம் பெற்று வரும் திரு.ஆரோக்கியசாமி கிளார்க் மற்றும் செயல் அலுவலர் திருமதி. சசிகலா ஆகிய இருவரின் வருமானம் என்ன என்று ஆராய வேண்டும். எப்படி இவ்வளவு விரைவாக புதிய சொத்துகள் வாங்குகிறார்கள் என்று ஆய்வு செய்ய வேண்டும். காசோலை எழுதும் அதிகாரம் இருப்பதால் இப்படி செய்கிறார்கள் இவர்களை பதவி இறக்கம் செய்ய வேண்டும். சுமார் 3 மாத காலமாக பொய்யான கீறல் இடப்படாமல் காசோலையினை போட்டு சம்பாதிக்கிறார்கள் ஒரு பொய்யான கீறல் இடப்படாமல் காசோலை வழங்குவது கிரிமினல் குற்றமாகும். இந்திய தண்டனை சட்டத்தின்படி இது மிகபெரிய குற்றமாகும். எந்த ஒரு செலவுகளுக்கும் வழிமுறை சரியாக இருக்கும் போது இப்படி குற்றம் செய்து வரும் இருவரின் பதவியினை குறைத்து, துறைரீதியான நடவடிக்கை எடுத்து மாவட்ட ரீதியான மாறுதல் செய்து அங்கேயும் சரியான முறையில் வேலை செய்ய ஆவன செய்ய வேண்டும். அய்யா, எதற்கு எடுத்தாலும் இருவரும் இலஞ்சம் அய்யா மிகவும் சிரமாக இருக்கிறது. இந்த பகவான் இருக்கும் புண்ணிய தலத்தில் இப்படி அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தி தனது குடும்ப வருமானத்தை பெருக்கும் இருவரின் சொத்துக்கள் எப்படி வந்தது என்று தங்கள் கட்டுபாட்டில் இருக்கும் இலஞ்ச ஒழிப்பு துறையின் மூலம் ஆய்வு செய்து உரிய தண்டனை பெற்று தரும்படி மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அய்யா, தணிக்கை துறையின் மூலம் ஆய்வு செய்ய வேண்டும். பொய்யான வவுச்சர்களை, இவர்கள் பதவி ஏற்ற நாளில் இருந்து ஆராய வேண்டும். குச்சனூரில் உள்ள கனரா வங்கியிடம் விசாரணை செய்தாலும் இவர்கள் பொய்யான கீறல் இடப்படாமல் காசோலை வழங்கி இவர்கள் செய்த ஊழல் தமிழ்நாட்டு மக்களுக்கும் குச்சனூர் பொது மக்களுக்கும் தெரியவரும். அய்யா, தயவு செய்து இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த செயலுக்கும் இலஞ்சம் கேட்கும் இருவரின் மீதும் நடவடிக்கை எடுத்து பகவான் இருக்கும் ஊரையும் எங்களை போன்ற பொதுமக்கள் சுலபமாக அணுகும்படி நிலைமையினை உருவாக்க வேண்டும்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 01.09.2022 நாளிட்ட கடிதம் மூலம் குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

1. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியில் பயணியர் தங்கும் விடுதி 10 அறைகள் கொண்டவை. இதில் நான் 01.07.2021ம் நாள் செயல் அலுவலராக பணி ஏற்றுக்கொண்டபோது மராமத்துப் பணிகள் 2020–2021 ஆண்டுக்கான அடிப்படை வசதி திட்டத்தில் நடைபெற்று வந்ததால் பணி நிறைவு பெற்றவுடன் சரிபார்த்து ஒப்பந்ததாரரிடம் பெற்று கொள்ளலாம் என்ற நிலையில், கட்டில் திருடப்பட்டுள்ளதாக புகார் வரப்பட்டதன் பேரில் விசாரிக்கப்பட்டு, கண்டறியாத நிலையில் சின்னமனூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு விசாரணையில் உள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு உயர் அலுவலர்களுக்கு எவ்விதமான தேக்கு மரக்கட்டில் மற்றும் மெத்தைகள் கொடுக்கப்படவில்லை, தற்போது 10 அறைகளுக்கான உபகரணங்கள் உள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலமாக தினகூலி அடிப்படையில் தூய்மை பணியாளர்கள், குடிநீர் விநியோகப் பணியாளர்கள், தெரு விளக்கு பராமரிப்பவர்கள் மற்றும் ஓட்டுநர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு போதுமான பணியிடம் தோற்றுவிக்கப்படாததால், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வருடந்தோறும் தற்காலிகமாக வழங்கப்படும் தினக்கூலி பட்டியல்படி 01.07.2021 முதல் 31.03.2022 வரை கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் சென்னை நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனடிப்படையில் மேற்குறித்த பணி செய்த நபர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் நிறுவனம், சென்னை மூலம் வரப்படும் கேட்பு பட்டியல்படி தொகை ஒரு நபருக்கு தினக்கூலி ரூ 392/– வீதம் ஒரு மாதப்பணிக்காலம் மொத்த தொகை மட்டும் கணக்கிட்டு கோடிட்ட காசோலையாக அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு ஊதியம் கிடைக்கப்பெற்றதும் உறுதி செய்யப்பட்டது. இதில் குறைவான நபர்களை கொண்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு மாறானது. மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கான தினக்கூலி பணியாளர் சப்ளை 01.04.2022 முதல் 31.03.2023 வரை, ஓர் ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் SHG தேனி நிறுவனத்தில் குறைந்த ஒப்பந்த விலையை ஏற்று, அதனடிப்படையில் அந்நிறுவனத்தின் மாதாந்திர தினக்கூலி ஒரு நபருக்கு தினக்கூலி ரூ 423/– பணிபுரிந்த காலத்திற்கு மட்டும் கேட்பு பெற்று, கோடிட்ட காசோலையாக வழங்கி சம்பந்தப்பட்ட பணியாளர்கள் வங்கி கணக்கில் ஈடுசெய்யப்பட்டுள்ள விவரம் உறுதி செய்யப்பட்டது. 07/2021ம் மாதம் முதல் 03/2022 வரை கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் சென்னை மூலமாக பொது சுகாதாரம் குடிநீர் மின் பணியாளர் மற்றும் ஓட்டுநர் உள்ளிட்டோர் 25 நபர்கள், மேற்பார்வையாளர்கள் 2 மொத்தம் 27 நபர்கள், மேலும் 04/2022 முதல் 06/2022 வரை கிரீன் ப்ரன்ஸ் SHG தேனி மூலம் பொது சுகாதாரம் குடிநீர் விநியோகம், மின்பணியாளர், ஓட்டுநர் உட்பட மொத்தம் 20 நபர்கள் மேற்பார்வையாளர் 1 நபர் மொத்தம் 21 நபர்கள் மட்டும் உள்ளனர்.

3. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியில் திடப்பணிகள், தெருவிளக்குகள், குடிநீர் விநியோக பராமரிப்பு, பொது சுகாதார பணிகள் தொடர்பாக ஏற்படும் செலவினங்களுக்கு கோடிட்ட காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது. பொது

சேவை வரி (GST), வருமான வரி மற்றும் பணியாளர்கள் ஊதியப்பிடித்தங்கள் உரிய தலைப்பில் உள்ளவைகள் அரசு தலைப்பில் செலுத்தப்படும் போது உங்களது காசோலை (Your self) போன்ற காசோலைகளுக்கு கோடிட்டு போடுவது இல்லை என்ற விவரம் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

4. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியின் மூலம் பதிவு செய்யப்படும் பிறப்பு, இறப்புக்கான சான்று அரசு உத்தரவுபடி சான்றுக் கட்டணமாக ரூ 200/– மட்டும் வசூலிக்கப்பட்டு பேரூராட்சி கணக்கில் ஈடுசெய்யப்பட்டு வருகிறது. சான்று கேட்டு விண்ணப்பிக்கும் நபர்களிடம் கூடுதலாக பணம் ஏதும் பெறவில்லை. இது தொடர்பாக புகார் வரவில்லை; மனுதாரர் உண்மைக்கு மாறாக தெரிவித்துள்ளார் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

5. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியின் மூலம் பொதுமக்கள் அத்தியாவசிய பணி, குடிநீர் விநியோகம், பொது சுகாதார தூய்மைப் பணி மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு உள்ளிட்ட பணிகளில் ஏற்படும் செலவினங்கள் சம்மந்தப்பட்ட பணியாளர்களின் தகவல் மனுவின் அடிப்படையிலும், நேரடி ஆய்வின் அடிப்படையிலும் செலவுகளுக்கு கோடிட்ட காசோலையாக வழங்கப்பட்டது. புகார் மனுதாரர் யூகத்தின் அடிப்படையில் உண்மைக்கு மாறாக தெரிவித்துள்ளார் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

6. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக 01.07.2021 முதல் பணி ஏற்றுக்கொண்டேன். இளநிலை உதவியாளர் திரு.ச.இ.ஆரோக்கியசாமி 02.08.2021ம் நாள் பணியிடமாறுதலில் வரப்பட்டு பணியில் சேர்ந்தார். நாங்கள் எந்த விதமான வீடு பங்களா கட்டவில்லை. இளநிலை உதவியாளர் திரு.ச.இ.ஆரோக்கியசாமி பெங்களூரில் எந்தவித சொத்தும் வாங்கவில்லை என எழுத்து மூலமாக பதில் தெரிவித்துள்ளார். புகார் மனுவில் உண்மைக்கு மாறாக தெரிவித்துள்ளார் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

7. தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ச.இ.ஆரோக்கியசாமி என்பவரின் பணிப் பதிவேட்டினை சரிபார்க்கப்பட்டதில் அவரது தகப்பனார் திரு.ச.இன்னாசி, மதகு திறப்பாளர் அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் பணியிடையே காலமானதால் வாரிசுதாரர் என்ற நிலையில் கருணை அடிப்படையில் 04.09.1991ம் ஆண்டு அலுவலக உதவியாளராக க.புதுப்பட்டி பேரூராட்சியில் பணியில் சேர்ந்து 20 சதவீதம் கீழ்நிலை பணியாளர்களுக்கான பதவி உயர்வில் தேனி மாவட்ட அளவில் முன்னுரிமை பட்டியல்படி பதவி உயர்வு அடிப்படையில் வரித்தண்டலராக 14.08.2018ல் பதவி உயர்வு பெற்று தென்கரை பேரூராட்சியில் பணியில் சேர்ந்துள்ளார் அதன் தொடர்ச்சியாக 02.08.2021 முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். தூய்மை பணியாளராக சேரவில்லை. மனுதாரர் குறிப்பிட்டுள்ள அனைத்தும் உண்மைக்கு மாறாக உள்ளது.

புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் அனைத்தும் செயல் அலுவலரான என்னையும் எனது கீழ்ப்பணிபுரியும் இளநிலை உதவியாளரையும் பழிவாங்கும் நோக்கத்தில் பணியிட மாற்றம் செய்ய வைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் கொடுக்கப்பட்டவையாகும்'' எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலரும், 28.09.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.தீ. ராஜ்கபூர் 28.09.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“தேனி மாவட்டம் குச்சனூர் பேரூராட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. தற்போதைய செயல் அலுவலரும், பஞ்சாயத்து கிளர்க்கும் சேர்ந்து கீழ்கண்ட முறைகேடுகள் உட்பட பல்வேறு முறைகேடுகளை செய்து வருகின்றனர்:

(1) குச்சனூர் பேரூராட்சியில் பக்தர்கள் தங்கும் இடத்தில் இருந்த தேக்கு மரத்திலான கட்டில் திருடப்பட்டுள்ளது. அரசு சொத்தை திருடியவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(2) பேரூராட்சியில் காசோலைகள் வழங்கும்போது கீறல் இடாமல் (not crossed) காசோலையை வழங்குகின்றனர். இதனால், காசோலையில் உள்ள நபர்களுக்கு பணம் செல்லாமல், இவர்களே தொகையை எடுத்துக்கொள்கின்றனர்.

(3) தற்காலிகப் பணியாளர்களைக்கொண்டு பேரூராட்சியில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 14 நபர்களைக் கொண்டு துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு, 23 பேர் துப்புரவுப் பணியில் இருந்ததாகக் கூறி, 13 பேரின் ஊதியத்தையும் செயல் அலுவலரும், மேற்கண்ட கிளார்க் ஆரோக்கியசாமியும் எடுத்துகொள்கின்றனர். இதற்கான புகைப்பட ஆதாரத்தை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

(4) இதில் மாவட்ட ஆட்சியரின் ஆணையில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு 424/– ரூபாய் ஊதியமாக வழங்க வேண்டும். ஆனால், மேற்கண்ட ஆணையில் உள்ளதைவிட மிகக் குறைவாகவே ஊழியர்களுக்கு தற்போதுவரை வழங்கப்பட்டு வருகிறது.

(5) மேலும் பல்வேறு பணிகளை பேரூராட்சியில் மேற்கொண்டதாகக் கூறி, போலியான வவுச்சர்களை அளித்து செயல் அலுவலரும், மேற்கண்ட கிளார்க்கும் முறைகேடுகளை செய்து வருகின்றனர்.

மேற்கண்ட முறைகேடுகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர், உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை ஆகிய துறைகளுக்கு என்னால் பல்வேறு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், மனுக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பேரூராட்சியில் முறைகேடுகள் தொடர்ந்து நடந்த போதிலும், தனியர் என்ற முறையில் என்னால் போதுமான ஆதாரங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, குச்சனூர் பேரூராட்சியில், செயல் அலுவலராலும், அங்குள்ள கிளர்க்காலும் நடத்தப்படும் முறைகேடுகள் குறித்து விசாரித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் அனுப்பப்பட்ட எனது 27.6.2022 நாளிட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலர் **28.09.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டவாறு குச்சனூர் பேரூராட்சியில் பக்தர்கள் தங்கும் விடுதியில் உள்ள தேக்கு மரத்திலான கட்டில், விடுதியில் மராமத்துப் பணியின்போது, அருகில் உள்ள பள்ளியில் வைக்கப்பட்டு, தற்போது அக்கட்டில் மேற்கண்ட தங்கும் விடுதியில் போடப்பட்டுவிட்டது. எனவே, மேற்கண்ட கட்டில் திருடுபோகவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடந்த ஆறு மாத காலமாக பக்தர்கள் தங்கும் விடுதிக்கென பேரூராட்சியால் கட்டில்கள் ஏதும் புதிதாக வாங்கப்படவில்லை. மாறாக மெத்தை, தலையணை மற்றும் பெட்சீட் போன்றவை மட்டும் உயர் அலுவலர்களின் உரிய அனுமதியுடன் பேரூராட்சியால் வாங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட கட்டில், மேற்கண்ட தங்கும் விடுதியில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக அவற்றின் புகைப் படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

தினக்கூலி பணியாளர்கள், குடிநீர் விநியோகப் பணியாளர்கள் மற்றும் தெரு விளக்கு பராமரிப்புப் பணியாளர்கள் பணியிடங்கள் போதுமான அளவில் இல்லாததால், கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் சென்னை என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் ஆணையில் தெரிவித்துள்ளவாறு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் 392/. வீதம் கணக்கிட்டு மாதந்தோறும் காசோலையாக மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது. எனவே, மனுதாரர் தனது மனுவில் கூறியது உண்மைக்கு புறம்பானதாகும்.

மேலும், பேரூராட்சியில் செய்யப்படும் பணிகளுக்கேற்ப, அதற்கான ஒப்பந்தத் தொகை அந்தந்த ஒப்பந்ததாரருக்கே காசோலை மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, போலி வவுச்சர்களைக் கொண்டு முறைகேடுகள் நடந்திருப்பதாக மனுதாரர் தெரிவித்துள்ள கூற்று, உண்மைக்கு மாறானதாகும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2021–2022**ம் ஆண்டிற்கான உள்ளாட்சி தணிக்கை இன்னும் குச்சனூர் பேரூராட்சியில் நடைபெறவில்லை எனவும், கடந்த **2020–21** ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை குறித்த அறிக்கையின் நகல்களை இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்திற்கு என்னால் அளிக்கப்பட்ட எனது **23.9.2022** நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், குச்சனூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சியை சார்ந்த மனுதாரர் திரு.தீ.ராஜ்கபூர் என்பவர் தனது 17.08.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், குச்சனூர் பேரூராட்சியில் பக்தர்கள் தங்கும் விடுதியில் இருந்த தேக்குமரக் கட்டில்கள் திருடப்பட்டுள்ளன; பேரூராட்சியால் செலவீனங்களுக்கு வழங்கப்படும் ஒப்பளிப்புக்கு கோடிடப்படாத காசோலைகள் வழங்கப்படுகிறது; 37தூய்மைப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டதாக தெரிவித்து, 14 நபர்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மீதமுள்ள 23 நபர்களின் ஊதியம் முறைகேடாக கையாடல் செய்யப்படுகிறது. ஆட்சியரின் ஆணைப்படி மேற்காணும் பணியாளர்கள் தினஊதியம் ரூ 424/– வழங்குவதற்கு பதிலாக குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது மற்றும் பேரூராட்சியில் பல்வேறு பணிகளை மேற்கொண்டதாக போலியான செலவுச்சீட்டுகள் (Vouchers) வழங்கி பணம் கையாடல் செய்யப்படுகிறது என புகாராக தெரிவித்துள்ளார்.

குச்சனூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் 10.05.2022 அன்று குச்சனூர் சுற்றுலா மாளிகையில் முதல் தளத்திலுள்ள 4 அறைகளிலிருந்த தேக்கு மரக்கட்டில்கள், மெத்தைகள் உட்பட தளவாடச் சாமான்கள் திருடு போய்விட்டதாக சின்னமனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். ஆனால் பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 28.09.2022 நாளிட்ட வாக்குமூலத்தில் விடுதி மராமத்துப்பணி மேற்கொண்டபோது மேற்படி தேக்கு கட்டில்கள் உட்பட மரச்சாமான்கள் அருகிலுள்ள பள்ளியில் வைக்கப்பட்டு இருந்ததாகவும் பராமரிப்பு பணி முடிவுற்றதும் மீண்டும் சுற்றுலா மாளிகையில் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்து பொருட்கள் எதுவும் திருடு போகவில்லை என தனது அறிக்கையில் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் செயல் அலுவலரால் புகைப்படங்களும் விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குச்சனூர் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கு வழங்கப்படும் அனைத்து காசோலைகளும் கோடிட்ட காசோலைகளாக (Crossed Cheques) வழங்கப்பட வேண்டும் என பேரூராட்சி அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். இதனால் எவ்வித முறைகேடும் நடைபெற வாய்ப்பு ஏற்படாது.

பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு காசோலைகள் மூலமாகவே செலவினம் மேற்கொள்ளப்படுவதால், போலியான வவுச்சர்கள் தயாரிக்கப்படுவதில்லை என்பது பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.

தினக்கூலி பணியாளர்களுக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரை தேனி மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி நபர் ஒருவருக்கு ரூ 423/– அடிப்படையில் 21 பணியாளருக்கு ஒப்பந்தாரர் நிறுவனம் மூலம் ECS மூலமாக வழங்கப்படுவது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

முறைகேட்டினை தடுக்கும் வண்ணம் பேரூராட்சியில் ஒப்பந்தப் பணியாளர்களின் வருகையினை Bio–Matric system மூலம் பதிவு செய்திட பேரூராட்சியின் செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

குச்சனூர் பேரூராட்சியின் செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்ட தணிக்கை அறிக்கையினை பரிசீலித்ததில் அவ்வறிக்கையானது குச்சனூர் பேரூராட்சியின் 2020–21 ஆம் ஆண்டிற்கான, இப்புகார் மனுவிற்கு தொடர்பில்லாத, கணக்குகள் மற்றும் அனைத்து நிதிகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கை ஆகும்.

இருப்பினும், உள்ளாட்சி நிதித் தணிக்கையில் ஆண்டுக்கணக்குகளுக்கான நடவடிக்கைக் குறிப்புச் சீட்டுகள், பொதுப்பேரேடுகள் மற்றும் துணைப்பதிவேடுகள், கணக்கு புத்தகங்கள், நிதிநிலை சரிக்கட்டல் நடவடிக்கைக் குறிப்புச் சீட்டுகள் மற்றும் கொள்முதல்களுக்கான இருப்புப் பதிவேடுகள் தணிக்கைக்குக் காண்பிக்கப்படாததாலும், ஆண்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மான்ய வரவுகளின் சரித்தன்மையினை உறுதி செய்ய தணிக்கைக்கு மான்யம் பெறப்பட்டதற்கான ஆவணங்கள் அளிக்கப்படாததாலும் குறைபாடுகள் இத்தணிக்கை அறிக்கையில் 2020–21 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 47 பத்திகளாகவும் (ரூ 18.50 இலட்சம்) 2007–08 முதல் 2020–21 ஆண்டுகள் வரை ஆக மொத்தம் 243 பத்திகளாகவும் (ரூ 264.94 இலட்சம்) சுட்டிக்காட்டப்பட்டு குச்சனூர் பேரூராட்சிக்கு குறையுள்ளன என குச்சனூர் பேரூராட்சியின் செயல்பாடு குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் சான்று வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அனைத்து 243 தணிக்கைத் தடைகளை விரைவில் நிவர்த்தி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சனூர் பேரூராட்சியின் செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The Local Fund Audit Director is instructed to get the cheques issued by this Local Body without crossing as alleged by the petitioner to verify the fact and if found to be true suitable advisory should be communicated to the Commissioner of Town Panchayats to pursue appropriate disciplinary action against all concerned. This practice should be curbed forthwith. The regular audit of this Town Panchayat may be carried out early in a thorough manner.

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.தீ. ராஜ்கபூர்,
வார்டு எண்.7, பள்ளிவாசல் தெரு,
குச்சனூர், தேனி மாவட்டம் – 625 515.

2) செயல் அலுவலர்,
குச்சனூர் பேரூராட்சி,
தேனி மாவட்டம் – 625 515.

3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தேனி மண்டலம், தேனி.

4) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

5) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.அர்.சி நகர், சென்னை – 28.

6) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.